# 6 நமக்காக மரித்த இயேசு

**இறைவனின்சாயலில்படைக்கப்பட்டமுதல்மனிதன், இறைவனுக்கு கீழ்ப்படியாமல் பாவத்திற் குட்பட்டான். பாஸ்கா தினத்தன்று ஆட்டுக் குட்டி ஒன்றைப் பலியிடுவதன் மூலம் தமது பாவத்திற்கு விமோசனம் பெறலாம் என்று யூதமதத்தில் நம்பிக்கை காணப்பட்டது. ஆட்டுக்குட்டியின் இரத்தம், தமக்கு பாவத்திலிருந்து விடுதலை தரும் என்று நம்பினார்கள். ஆனால் இயேசு, தமது இரத்தத்தை சிலுவையில் சிந்தி, மனிதருக்கு மீட்பைப் பெற்றுத்தந்தார். இதன் மூலம் இறைவனிடம் இருந்து விலகிச்சென்ற மனிதனுக்கு, மீண்டும் இறைதொடர்பு கிடைத்தது.**


'பெரிய வெள்ளி' தினத்தை நினைவு கூறுவதற்காக பாடசாலை கிறிஸ்தவ மன்றத்தால் விசேட நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மண்டபத்தின் மேசை மீது சிலுவை வைக்கப்பட்டிருந்தது. சமய பாட ஆசிரியரின் தலைமைத்துவத்துடன் நிகழ்வு ஆரம்பமாகியது.

ஆசிரியர் : இன்று இயேசு சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வில் எமது கண்ணோட்டத்தை செலுத்துவோம். உங்களுக்கு தெரிந்தவைகளை கூறுங்கள்.

நகோமி : எமது பாவங்களுக்காக இயேசு சிலுவையில் மரித்தார்.

சலோமி : இயேசுவின் தலையில் முள்முடி சூட்டினார்கள். கசையால் அடித்தார்கள்.

ஆசிரியர் : ஆம்! அனைவரும் சரியானதைக் கூறினீர்கள். இறைவன் தமது சாயலில் மனிதனைப் படைத்து இறைவிருப்புக்கு ஏற்ப வாழவேண்டும் என எதிர் பார்த்தார். ஆனால் அவன் அதற்கு மாறாக நடந்தான். இவ்வாறு விலகிச் சென்ற மனிதனை, மீண்டும் தம்மிடம் கொண்டுவரப் பல்வேறு முறைகளில் செயற்பட்டார். இறுதியாக, இறைமகன் இயேசு வை உலகுக்கு அனுப்பினார். அவர் மனித விடுதலைக்காகப் பல துன்பங்களை அனுபவித்தார். இயேசுவின் துன்புறும் நிகழ்வை, நாம் பெரிய வெள்ளி தினத்தில் நினைவு கூறுகின்றோம். மத்தேயு 27:32-50 வாசியுங்கள். இதில் சிலுவையில் அறைதல் நிகழ்வுடன் தொடர்பான நிகழ்வுகள் அழகாக குறிப்பிடப்பட்டுள்ளன.





''இயேசுவை சிலுவையில் அறைதல்'' தொடர்பான நிகழ்வில் எமது கண்ணோட்டத்தை செலுத்துவோம். எபிரேய மொழியில் ''கொல்கொதா'' அல்லது கபால ஸ்தலம் என்றும் பொருள்படும் மண்டையோட்டு இடத்தில் இயேசுவைச் சிலுவையில் ஆணிகளால் அறைந்தார்கள். கள்வனைப் போன்று அவரது வலது புறம் ஒருவனும் இடது புறம் ஒருவனுமாக இரு கள்வர்களைச் சிலுவையில் அறைந்தார்கள். ஆளுநர் பிலாத்துவால் ''யூதரின் அரசன்'' என குற்றம் சாட்டப்பட்டார். அன்று இடம்பெற்ற நிகழ்வு உலக வரலாற்றில் என்றும் மறக்கமுடியாத ஒன்றாகும். மத்தேயு நற்செய்தி நூலில் எழுதப்பட்டுள்ள ஒழுங்கில், துன்புறுதல் நிகழ்வுகளை நாம் இங்கு கற்போம்.




படம் 6.1 இயேசு சிலுவையை சுமந்து செல்லல்.

## இயேசு சிலுவையை சுமந்து கொல்கொதாவை அடைந்தார்



படம் 6.2 சிலுவையை சுமப்பதற்கு சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் இயேசுவுக்கு உதவி செய்தல்.

இயேசுவின் சிலுவையை சுமப்பதற்கு சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் வற்புறுத்தப்பட்டான் அவன் சிலுவையை சுமந்து இயேசுவுக்கு உதவினான்.




படம் 6.3 இயேசுவின் உடைகளைப் பங்கிடுதல்

'இவர் யூதரின் அரசனாகிய இயேசு' என எழுதப்பட்ட வசனத்தை சிலுவையில் தொங்கவிட்டனர். இயேசுவின் தலையில் முள்முடியை அணிவித்தனர். இயேசுவை ஆணிகளால் அடித்த பின்னர் அவரது ஆடைகளைப் பங்கிட்டுக் கொண்டனர்.



படம் 6.4 இயேசு சிலுவையில் உயிர்நீத்தல்

அவருக்கு இரு பக்கத்திலும் இரு கள்வர்களைச் சிலுவையில் அறைந்தார்கள். அவர்களில் ஒருவன் இயேசுவை பழித்துரைத்தான். தலைமைக் குருக்களும், யூத மதத்லைவர்களும் மறைநூல் அறிஞர்களும் அவரை இகழ்ந்தனர். நண்பகல் முதல் பிற்பகல் மூன்றுமணி வரை புவியில் இருள் சூழ்ந்தது. இயேசு 'ஏலி, ஏலி லாமா சபத்தானி' என உரத்த குரலில் கூப்பிட்டார். (பொருள்: என் இறைவா! என் இறைவா! ஏன் என்னைக் கைவிட்டீர்) அன்று எதுவித குற்றங்களும் செய்யாத இயேசு துன்பங்களை

அனுபவித்து சிலுவையில் உயிர் துறந்தார். பாவம் செய்த மனித இனத்துக்காக அவர் மரித்தார். சிலுவையில் தொங்கிய இயேசு மனிதகுலத்தின் மன்னிப்புக்காக தந்தையிடம் வேண்டுதல் செய்தார். (லூக்கா 23:34)

**'ஆலயத்தை இடித்து மூன்று நாட்களுக்குள்**
**கட்டுகிறவனே உன்னை நீயே காப்பாற்று'**

சிலுவையில் அறையப்பட்டு மூன்றாம் நாளில் இடம் பெறவிருக்கும் உயிர்ப்பை குறித்து கூறப்பட்டது.

**''பிறரை மீட்டான். ஆனால் தன்னை மீட்கமுடியவில்லை ''**
**மத் 27 : 42**

மனுக்குலத்தை பாவத்திலிருந்து விடுதலை செய்யவே இயேசு சிலுவையில் பலியானார்.

**''நீ இஸ்ரயேலரின் அரசனா? சிலுவையிலிருந்து இறங்கி வா.**
**அப்பொழுது நாங்கள் உம்மை நம்புவோம்.''**
**மத்தேயு 27 : 42**

இறைமகன் என்றால் இறங்கி வா என்பதில் ''இயேசுவின் வாழ்வின் தியாகத்தால் மனிதருக்கு நிலை வாழ்வு உரித்தாகின்றது'' என விசுவாசிக்க முடிகின்றது.

படைத்த கடவுளுக்குக் கீழ்படியாமல், அவரது விருப்பத்துக்கு மாறாக, மனிதன் பல வேளைகளில் செயற்பட்டிருக்கிறான். இதனால் இறை மனித உறவு உடைந்துபோனது. இயேசு உடைந்துபோன உறவை மீண்டும் உருவாக்கக் கல்வாரி சிலுவையில் தன் உயிரை அர்ப்பணித்தார்.

அனைத்து உலகுக்கும் புதிய எதிர்பார்ப்பை அளித்தார். மனிதனால் தனியாக பாவத்திலிருந்து விடுதலை பெற முடியாது. எமது பாவங்களுக்காக நாம் பெற வேண்டிய தண்டனையை அவர் ஏற்று எமக்கு மீட்பு அளித்தார்.

இயேசு, தனது பணியை வெற்றியுடன் செய்து முடித்தார். எமது விடுதலைக்காக உயிர் நீத்த இயேசுவுக்கு, நாம் நன்றி கூறுவோம். சிலுவையின் பாதத்தில் எமது குற்றங்களை நீக்கி, நாம் அவரது சொந்த பிள்ளைகளாக செயற்பட்டு வாழ்வோம்.

**மனனவசனம்**

**எசாயா 53 : 6**

செயற்பாடு

1. இயேசுவின் சிலுவை மரணத்துடன் தொடர்புற்ற சம்பவங்களை முறையாக எழுதுக.